# Refugee Council information

Tamil

# எப்படி புகார் அளிப்பது

October 2006

அகதிகள் மன்றம்(Refugee Council) தனது அனைத்து பயனாளர்களுக்கும் உயர்தரமான சேவைகளை வழங்குவதற்கு கடமைப்பட்டுள்ளது. எனினும், நாங்கள் எப்போதும் வெற்றிபெற முடியாது என்பதை உணர்ந்திருக்கிறோம். நீங்கள் அகதிகள் மன்றத்தின் ஏதேனும் ஒரு பகுதியிலிருந்து பெற்ற சேவையில் மகிழ்ச்சியடையாவிட்டால் நீங்கள் புகார் தெரிவிக்கலாம்.

**நீங்கள் செய்யக்கூடியது**

சம்பந்தப்பட்ட மேலாளருடன் முறையானபடியல்லாமல் அலுவல்சாரா முறையில் கலந்தாலோசித்து தங்களின் புகாரை நிவர்த்தி செய்துகொள்ளமுடியும். அது இயலாமல் போனால், அல்லது நீங்கள் அத்தகைய செயல்களை செய்வதில் சௌகரியமாக உணராவிட்டால், நீங்கள் முறையான புகாரை அளிக்கலாம்.

**எப்படி புகார் அளிப்பது**

நீங்கள் முறையான புகார் அளிக்கவிரும்பினால், தயவு செய்து புகார் படிவத்தை பூர்த்தி செய்து, கீழ்காணும் முகவரியில் உள்ள புகார் அதிகாரிக்கு(Complaints Officer) அனுப்பவும். இந்தப் படிவம் எங்களின் அனைத்து அலுவலகங்களிலும் கிடைக்கும் மற்றும் அதை நீங்கள் எங்களுடைய வலைதளத்தில் இருந்து தகவலிறக்கம் செய்து கொள்ளலாம். http://languages.refugeecouncil.org.uk/tamil.

உங்களால் எழுத்து மூலமாக புகார் அளிக்கமுடியவில்லை என்றால் நீங்கள் புகார் அதிகாரியை தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரிலோ தொடர்புகொள்ளலாம். முறையான புகார் அளிப்பது எதிர்காலத்தில் நாங்கள் உங்களை நடத்தும் விதத்தில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**படிவத்தைப் பூர்த்தி செய்தல்**

- தயவு செய்து உங்களால் முடிந்த அளவிற்கு விவரங்களை எங்களுக்குத் தரவும்.
- பிரச்சனை நடைபெற்ற நாள் மற்றும் நேரத்தை குறிப்பிடவும்.

தயவு செய்து படிவத்தை இங்கு அனுப்பவும்:
**Complaints Officer, Refugee Council, 240-250 Ferndale Road, London SW9 8BB**
**Tel: 020 7346 6710**

நீங்கள் அகதிகள் கவுன்சிலின் ஒரு அலுவலகத்துக்கு வருகைத் தருவதாக இருந்தால் விசேடமாக பெயரிடப்பட்டு வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் படிவத்தைப் போடலாம். நீங்கள் படிவத்தை ஏதேனும் ஒரு பணியாளர் அல்லது தன்னார்வலரிடமும் அளிக்கலாம். மாற்றாக, நீங்கள் அதை தொலைநகல் மூலம் 020 7346 6760 என்ற எண்ணுக்கு அனுப்பலாம்.


Registered charity no. 1014576 Registered company no. 2727514 Registered address: 240-250 Ferndale Road London SW9 8BB

### அடுத்து என்னவாகும்?

உங்கள் புகாரைப் பெற்றவுடன், நாங்கள் புகாரைப் பெற்றுக் கொண்டதை உங்களுக்கு எழுத்துமூலம் தெரிவிப்போம். அதன் பிறகு உங்கள் புகாரின் மீது விசாரணை நடத்தி மற்றும் அதன் முடிவுபற்றி உங்கள் புகாரைப் பெற்ற 10 பணி நாட்களுக்குள் எழுதுவோம். நீங்கள் எங்கள் பதிலில் திருப்தியடையவில்லை என்றால் மேலும் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்பது குறித்து நாங்கள் உங்களுக்கு விவரங்களை வழங்குவோம். அனைத்து நிலைகளிலும் உங்கள் புகாரை மிகவும் ரகசியமானதாகவே நாங்கள் கருதுவோம்.


Registered charity no. 1014576 Registered company no. 2727514 Registered address: 240-250 Ferndale Road London SW9 8BB

# Refugee Council complaints procedure

Tamil

## புகார் படிவம்

**உங்கள் பெயர்**

**உங்களை நாங்கள் தொடர்பு கொள்வதற்கான உங்கள் முகவரி மற்றும் அஞ்சல் குறியீடு**

**உங்கள் தொலைபேசி எண்**

தயவு செய்து கீழே நீங்கள் புகார் அளிக்கும் காரணம் பற்றி உங்களால் முடிந்த அளவு விவரமாக, பிரச்சனை நடைபெற்ற நேரம் மற்றும் நாள் ஆகியவை உட்பட எழுதவும். எவ்வாறு புகார் செய்வது என்ற துண்டுபிரசுரத்தை முதலில் படிப்பது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கக்கூடும


Registered charity no. 1014576 Registered company no. 2727514 Registered address: 240-250 Ferndale Road London SW9 8BB

தேவைப்பட்டால தயவு செய்து கூடுதல் பக்கங்களை சேர்க்கவும்.

**உங்கள் கையொப்பம்**

**தேதி**

நீங்கள் அகதிகள் மன்றம் (Refugee Council) அலுவலகத்தில் இருக்கும்பட்சத்தில் எந்த ஒரு ஊழியரிடமும் அல்லது தன்னார்வலர்களிடமும் அதை கொடுக்கலாம். அல்லது நீங்க்ள அதை விசேடமாக பெயரிடப்பட்ட பெட்டிகளில் போடலாம். நீங்கள் 020 7346 6760 என்ற எண்ணுக்கு ஃபேக்ஸும் அனுப்பலாம் அல்லத அதை பின்வரும் முகவரிக்கு அஞ்சல் செய்யலாம்:

**Complaints Officer**
**Refugee Council**
**240-250 Ferndale Road**
**London SW9 8BB**

நீங்கள் அகதிகள் கவுன்சிலின் புகார் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளைப் பெற விரும்பினால், தயவு செய்து பெட்டியில் குறியிடவும்: ☐


Registered charity no. 1014576 Registered company no. 2727514 Registered address: 240-250 Ferndale Road London SW9 8BB